**DEPOSITION OF WITNESS**
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**
- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF - CUM JUDICIAL MAGISTRATE THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: CC **.No. 414/2022**
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW4
Defendant :
Court :

Name : கண்ணன் – சிறப்பு சார்பு ஆய்வாளர்
Father's/
Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

11.03.2026. **CC.No.414/2022** அ.சா.4 கண்ணன் – சிறப்பு சார்பு ஆய்வாளர்

( எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )

**<u>முதல் விசாரணை</u>:**

1) நான் தற்போது திருப்புவனம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சார்பு ஆய்வாளர் திரு. பாலமுருகன் பணிமாறுதல் ஆகி தற்போது சிறப்பு பணியில் உள்ளதால் வழக்கின் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு அவருக்காக என்னை கூடுதல் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு ஆவணங்களை நான் பராமரித்து வரும் வகையிலும் சார்பு ஆய்வாளர் திரு. பாலமுருகன் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும்.

2) கடந்த 10.12.2019 ம் தேதியன்று 23.00 மணியளவில் மேற்படி சார்பு ஆய்வாளர் திரு.பாலமுருகன் நிலையப் பொறுப்பிலிருந்தபோது கழுகேர்கடை காலனியைச் சேர்ந்த மாயன் மகன் ராஜேந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகாரின் தன்மைக்கு ஏற்ப நிலையக் குற்ற

R VENKADESH PRASANTH Digitally signed by R VENKADESH PRASANTH Date: 2026.03.11 18:33:46 +0530

எண். 405/2019 இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) மற்றும் 109 ன் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளார்.

3) மேற்படி புகார் மனுவின் அசலையும் முதல் தகவல் அறிக்கையினையும் இணைத்து கணம் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம் திருப்புவனம் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். மேற்படி **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

4) பின்னர் இவ்வழக்கை சார்பு ஆய்வாளர் திரு. பாலமுருகன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் பகல் 12.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் எல்லம்மாள், கணபதிகார்த்திக் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். பின்னர் பார்வை மகஜரில் மேற்படி சாட்சிகள் கையொப்பம் செய்துள்ளனர். **மேற்படி பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

5) பின்னர் இவ்வழக்கின் பட்டியல் சாட்சிகளான ராஜேந்திரன், கோபி, பிச்சையம்மாள், முத்துராக்கு, பிரபாகரன் மற்றும் மகஜர் சாட்சிகள் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சாட்சிகளின் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் அவரை அதே நாள் எதிரி உதயக்குமார் என்பவரை கழுகர்கடை பேருந்து நிறுத்ததில் வைத்து எதிரியை அடையாளம் கண்டு அவரை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். அதன் பின்பு காயம்பட்ட ராஜேந்திரன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஸ்டீபன் தனபால் என்பரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார். **அந்த காயச்சான்று அ.த.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

6) அதன் பின்பு மேற்படி சார்பு ஆய்வாளர் இந்த வழக்கில் மற்றொரு எதிரியான நாகரத்தினம் த/பெ.ஆறுமுகம் என்பவர் இந்த சம்பவத்தில் ஈடுபடவில்லை என தனது சாட்சி விசாரணையில் இருந்து தெரியவந்தது என கூறி அவரை இந்த வழக்கிலிருந்து நீக்கரவு செய்து எதிரி நீக்கல் மற்றும் சட்டப்பிரிவு நீக்கல் அறிக்கையை தயார் செய்து கணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். **மேற்படி எதிரி நீக்கல் மற்றும் சட்டப்பிரிவு நீக்கல் அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

7) அதன் பின்பு சார்பு ஆய்வாளர் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழ் கடந்த 22.01.2020 ம் தேதி

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.11 18:33:54 +0530

குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

புகார் மனுவைப் பெற்று சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர், மாதிரிவரைபடம் சம்பவ இடம் செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கின் தோதிற்கு ஏற்ப தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.11 18:33:59 +0530